# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC –42/2025 |
| Deposition of Witness | : | PW- 4 |
| Name | : | கதிர்வேல் |
| Father Name | : | வெள்ளியங்கிரி |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 37 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.03.2026

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். தாராபுரம் ரோட்டில் CSI சர்ச் அருகே கோழிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 25.12.2024 ஆம் தேதியன்று காலை 7.00 மணியளவில் நான் எனது கடையை திறக்க வரும்போது போலீசார் முன்தினம் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் திருநாவுக்கரசு என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தில் இறந்த அந்தோனி ராஜ் எனது உறவினர் என்றால் சரியல்ல. அவருக்கு ஒரு 75 வயது இருக்கும் என்றால் சரிதான். அவருக்கு காது கேட்கும் திறன் குறைவாக உள்ளது என்றால் சரிதான். கண்பார்வை குறைவாக உள்ளது என்றால் சரிதான். இதுபோலவே பலமுறை அந்தாணிராஜ்க்கு வாகனத்திற்கு குறுக்கே சென்று விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேன். போலீசார் ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த தாளில்

காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.09 17:55:39 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்